வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் வழிபாடு

| முனைவர் ச.தனலெட்சுமி, | ஆ.ஹரிதாபேபி, |
|---|---|
| தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், | முனைவர் பட்ட ஆய்வாளர், |
| முதுகலை மற்றும் | தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் |
| தமிழாய்வுத்துறை, | மகளிர் கல்லூரி, |
| தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் | சிவகாசி – 626 123,: |
| இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, | harithababy2001@gmail.com |
| சிவகாசி – 626 123. | அலைபேசி எண் : 9843828694. |

**ஆய்வுச் சுருக்கம்**

கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது ஔவையின் கூற்று. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறைவன் எழுந்தருளியுள்ள கண்களை கவரும் படியான பல கோவில்கள் தமிழகத்தே உள்ளன. அத்தலங்களில் சமுதாயத்தில் வேரூன்றி நின்று நிலைத்திருக்கும் நாட்டுப்புற நம்பிக்கைகள் பல. காலங்கள் பல கடந்தாலும் இத்தகைய நம்பிக்கைகளின் பழமைகள் மறைந்து விடுவதில்லை என்பதை இன்றும் நாட்டுப்புறங்களிலே காணலாம். இப்படிப்பட்ட நாட்டுப்புறக் காவல் தெய்வமான அய்யனார் தான் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள இனாம்கரிசல்குளம் ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோயிலிலும் அருள்பாலிக்கக் கூடிய தெய்வம் ஆவார். அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் வழிபாடு என்னும் தலைப்பில் இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது. அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் திருக்கோவில் தொடர்பாக செய்திகளாவன,

- அய்யனார் என்ற சொல்லானது அய்(ஐ), அன், ஆர் என்ற மூன்றால் ஆனதாகும்.
- சிலப்பதிகாரம், பக்தி இலக்கியங்கள், கந்தபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் புராணங்களிலும் அய்யனார் வழிபாடு உள்ளன.
- தொடக்க காலத்தில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் தெய்வத்தை முருகர் என்று நினைத்து வழிபட்டனர் .
- உடன்குடி ஊரில் உள்ள தலைதாங்கி அய்யனார் கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து கட்டப்பட்ட கோவில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் ஆகும்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் ஊரைக் காக்கும் தெய்வம் என்பதால் இனாம்கரிசல்குளம் ஊரின் எல்லையில் கண்மாய்க் கரை அருகே ஒரு சிறிய சதுர

கருவறையில் அய்யனார் தனது இரு துணைவியுடன் நிற்ற கோலத்தில் வீற்றிருக்கிறார்.

- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கிழக்கு திசை நோக்கி அமர்ந்திருப்பார். தலையில் ஜடாமகுடமும் வலது காதில் குழையும் இடது காதில் குண்டலமும் சந்தனமும் வலது கையில் தண்டம் அல்லது செண்டும் வைத்திருப்பார்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் பொற்கொடிஅம்மன், பூரணத்தம்மனுடன் வீற்றிருக்கிறார்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனாரின் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றான அருள்மிகு ஸ்ரீ கரையடி கருப்பசாமி காவல் தெய்வமாவார்.
- ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை திருவிழா தொடங்குகிறது. வெள்ளிக்கிழமை காலை அய்யனாருக்கும் தேவியருக்கும் கருப்பசாமிக்கும் அபிஷேகம் நடைபெறும். அன்று இரவு கோயில்வீட்டில் பெட்டியை கொட்டு முழக்கோடு ஊர்வலமாக ஐயனை அழைத்து வீதி உலா வந்து கோவிலுக்கு எடுத்துச் செல்கின்றனர். இவ்வழிபாட்டு நாட்களில் சாமியாட்டம் சிறப்பாய் நடத்தப்படுகின்றது. அதன் பின் சிறுவர் - சிறுமியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை மாலையில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் திடலில் அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெறும். இரவில் ஸ்ரீ கரையடி கருப்பசாமிக் உச்சிக்கால பூஜை மிகச் சிறப்பாக நடைபெறும்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் சைவ உணவு உண்பவர். இவரது பரிவார தெய்வங்களான ஸ்ரீ கரையடி கருப்பசாமிக்கு ஆடு, சேவல் பலியிடுகின்றனர். பலியிடும் போது அய்யனார் சன்னதியை மூடிவைத்து விடுவார்கள்.
- நேர்த்திக்கடனுக்கு நேர்ந்து கொண்டவர்களும் முடி இறக்கிக் கொள்கின்றனர். உயிருள்ள ஆடு, சேவல் போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் திருக்கோவில் அமைவிடம், தலவரலாறு, கோவில் அமைப்பு, அய்யனாரின் தோற்றம், பொற்கொடிஅம்மன் பூரணத்தம்மன் , ஸ்ரீ கரையடி கருப்பசாமி, கோவில் திருவிழா , அய்யனார்கான படையல் , நேர்த்திக்கடன்கள் பற்றிய செய்திகளை இவ் ஆய்வுச்சுருக்கம் வழி அறிய முடிகிறது.

**முன்னுரை**

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஆன்றோர்களின் வாக்கு. கோயில்கள் என்பவை ஆன்மிகத்துடன் இணைந்து மக்களது வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்புடையன. தமிழ்ச்சமுதாய அமைப்பில் பழங்காலந்தொட்டே நாட்டுப்புற மக்களால் நாட்டுப்புறத்தெய்வ வழிபாடு நடைபெற்று வருகிறது. கண்ணுக்குப்புலப்படாத சக்தி உள்ளது என நம்பும் மக்கள் அச்சக்தியை இறைவன் என நினைத்து வழிபடுகின்றனர். அச்சக்தியே ஊரையும், தங்களையும் காக்கிறது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையைக்

கொண்டுள்ளனர். மக்களின் அன்றாட வாழ்வியல், தெய்வ வழிபாடு, திருவிழா, பண்டிகை, சடங்குகள் ஆகியவை சிறு தெய்வங்கள் சார்ந்தே அமைகின்றன. இப்படிப்பட்ட நாட்டுப்புறக் காவல் தெய்வமான அய்யனார் தான் விருதுநகர் மாவட்டம் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோயிலிலும் அருள்பாலிக்கக் கூடிய தெய்வம் ஆவார். அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் திருக்கோவில் அமைவிடம், தலவரலாறு, கோவில் அமைப்பு, அய்யனாரின் தோற்றம், பொற்கொடிஅம்மன் பூரணத்தம்மன் , பரிவாரதெய்வமான ஸ்ரீ கரையடி கருப்பசாமி, மர வழிபாடு, சூலாயுத வழிபாடு ,கோவில் திருவிழா , அய்யனார்கான படையல் , நேர்த்திக்கடன்கள் பற்றி தொடர்பான செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**அய்யனார் சொற்பிறப்பியல்**

அய்யனார் என்ற சொல்லானது அய்(ஐ), அன், ஆர் என்ற மூன்றால் ஆனதாகும். இதில் ஐ என்ற எழுத்து தலைவன் என்றும் அன் என்பது ஆண்பால் ஈர் ஆகும். ஆர் என்பது மரியாதைக்குரிய விகுதியாகும். அய்யனாரின் மற்றொரு பெயர் சாஸ்தா. [1] சாஸ்தா என்பது ஒரு ஆசிரியரைக் குறிக்கும் ஒரு பொதுவான சமஸ்கிருதச் சொல். சமஸ்கிருத நூல்களில் அவர் சாஸ்தாவாகத் தோன்றினாலும், பண்டைய தமிழ் பதிவுகள் அவரை சட்டன் (சாத்தன், காத்தாண்) என்று குறிப்பிடுகின்றன. [2] சாஸ்தா என்பது இன்று அய்யனாரைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் என்றாலும், அதே பெயரில் வேறு இரண்டு தெய்வங்கள் அறியப்படுகின்றன. புத்தரை சாஸ்தா என்றும் , முருகனை பிரம்ம-சாஸ்தா என்றும் குறிப்பிடுகிறோம். சாஸ்தா என்பது ஒரு ஆசிரியரைக் குறிக்கும் ஒரு பொதுவான சமஸ்கிருதச் சொல் ஆகும்.

**தமிழ் இலக்கியங்களிலும் புராணங்களிலும் அய்யனார் வழிபாடு**

- சாத்தன் எனும் பெயர் பழந்தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. இப் பெயரே பிற்காலத்தில் அய்யனாராக வழங்கலாயிற்று எனச் சிலர் கூறுவர்.
- சிலப்பதிகாரத்தில் மாற்றாள் குழந்தைக்குப் பாலுட்டிய போது அது விக்கி இறந்ததால் அஞ்சிய மாலதி என்பவள் இறுதியில் பாசண்டச் சாத்தனிடம் வேண்ட அவரே குழந்தையாக வந்தார் என்றும், தேவந்தி என்பவள் கணவனாகச் சில ஆண்டுகள் சாத்தன் எனும் தெய்வம் வாழ்ந்ததாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.
- பக்தி இலக்கியங்களில் சிவனுக்கும் திருமாலான மோகினிக்கும் பிறந்ததாக அய்யனார் கூறப்படுகிறார் என்பது நாயன்மார், ஆழ்வார்கள் பாடல்களிலிருந்து தெரிகின்றது.
- கந்தபுராணத்தில், அசுரகாண்டத்தில், மகா சாத்தாப் படலம் எனும் பகுதியில், அய்யனாரின் அவதாரம் கூறப்படுகிறது. அமுதம் பங்கிடுதல், மோகினியைச் சிவன் சேருதல், அய்யனார் பிறத்தல், சிவளிடம் வளர்தல், சூரபதுமாதியர்களால் இந்திரனுக்கும் இந்திராணிக்கும் துன்பம் நேரும்பொழுது இந்திராணியை மாகாளனை அனுப்பிக் காத்தல் முதலிய செய்திகள் உள்ளன. அய்யனார் கதைப் பாடல் சுவடிகளின் ஒரு பகுதிக்குக் கந்த புராணச் செய்திகளே காரணமாக இருந்துள்ளன.

**அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் திருக்கோவில் அமைவிடம்**

ஊரைக் காக்கும் தெய்வம் என்பதால் பெரும்பாலும் நீர் நிலைகளின் அருகே அய்யனார் கோயில்கள் ஊரின் எல்லையிலேயே இருக்கும். அதிலும் குறிப்பாக கண்மாய்க் கரை மற்றும் நீர் நிலைகளின் அருகே இருக்கும். விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வன்னியம்பட்டி விலக்கு இனாம்கரிசல்குளம் ஊரின் எல்லையில் கிழக்கு நோக்கி நீர் நிலைகளின் அருகே அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் திருக்கோவில்.

**அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் தல வரலாறு**

பழங்காலம் முதற்கொண்டே அய்யனார் வழிபாடு தமிழகத்தில் இருந்து வந்ததற்கான ஆதாரங்கள் இலக்கியங்களில் இருக்கின்றன. சமணர்கள் கோயிலிலும் அய்யனார் தெய்வத்தைப் பரிவாரத் தெய்வமாய் வைத்து வழிபட்டுதை அறிவோம். தொடக்க காலத்தில் அய்யனார் தெய்வத்தை முருகர் என்று நினைத்து வழிபட்டனர். பிற்காலத்தில் அய்யனார் தெய்வமே உத்தரவிட்டு, 'எனக்கு இங்கே கோயில் எழுப்பு' என்று கூறும் போது, அதை நிறைவேற்ற பிடி மண் எடுத்து அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் எழுப்பினர். பிடிமண் எடுத்து கோயில் எழுப்புவது, விழா எடுப்பது பன்நெடு காலமாக நம் மண்ணில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வு. ஒரு பகுதியில் வசிக்கும் மக்களின் குலதெய்வம், நீண்ட தூரத்தில் இன்னொரு பகுதியில் இருக்கும். அப்படி தொலைவில் இருக்கும் தங்கள் குல தெய்வம் அமைந்திருக்கும் நிலத்தின் மண்ணை எடுத்து வந்து கோயில் எழுப்பியோ, நினைவாக வைத்தோ வழிபாடு மற்றும் விழா நடத்துவார்கள். அவ்வாறாக உடன்குடி ஊரில் உள்ள தலைதாங்கி அய்யனார் கோவிலில் இருந்து மண்ணை எடுத்துச் சென்று பல ஊர்களில் வைத்து வணங்குகின்றனர்.இங்கு நேரடியாக வர இயலாதவர்கள் அந்த கோவிலின் மண்ணை வணங்கினாலே அய்யனார் அருள் கிடைக்கும் என நம்புகின்றனர். அவ்வாறாக உடன்குடி ஊரில் உள்ள தலைதாங்கி அய்யனார் கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து கட்டடப்பட்ட கோவில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் ஆகும்.

**அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் அமைப்பு**

எல்லாத் தெய்வங்களுக்கும் அமைந்திருப்பது போல அய்யனாருக்குப் பெரிய கோயில் அமைவதில்லை. பெரிய கூரை வேய்ந்த இடங்களோ அமைப்பதில்லை. அபூர்வமாகச் சில இடங்களில் தான் கோயிற் கட்டடம் அமைப்பர். ஊரைக் காக்கும் தெய்வம் என்பதால் ஊரின் எல்லையில் கண்மாய்க் கரை அருகே ஒரு சிறிய சதுர கருவறையில் அய்யனார் தனது இரு துணைவியுடன் நிற்ற கோலத்தில் வீற்றிருக்கிறார்.

- முன் மண்டபம்

  கருவறைக்கு முன் உள்ள மண்டபம் முன்மண்டபம் அல்லது முகமண்டபம் எனப்படும். அருள்மிகு அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவிலில் தூண்களுடன் கூடிய முன்மண்டபம் இடம்பெற்றுள்ளது. தூண்களுடன் கூடிய முன்மண்டபம் தற்காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். முன் மண்டபத்தின் வலதுபக்கம் தலவிருட்சமாக ஆலமரம் உள்ளது.

**அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனாரின் தோற்றம்**

அய்யனார் கிழக்கு திசை நோக்கி அமர்ந்திருப்பார். இளைஞரைப் போன்றவர். தலையில் ஜடாமகுடம் அணிந்திருப்பார். வலது காதில் குழையும் இடது காதில் குண்டலமும் அணிந்திருப்பார் மற்றும் சிவனுக்கு உரிய அனைத்து ஆபரணங்களையும் அணிந்திருப்பார். சந்தனம் பூசியிருப்பார். வலது கையில் தண்டம் அல்லது செண்டு வைத்திருப்பார். இடது கையை இடது காலின் மீது சார்த்தியது போல் வைத்திருப்பார்.

**தேவியர் - பொற்கொடிஅம்மன் , பூரணத்தம்மன்**

அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் பொற்கொடிஅம்மன் பூரணத்தம்மனுடன் வீற்றிருக்கிறார். பொற்கொடி என்றால் பூவைப் போன்ற பண்புடையவள் என்று பொருள். பூரணம் என்றால் நிறைவு, மனநிறைவானவள், முழுமதி போன்றவள் என்று பொருளாகும்.

**பரிவார தெய்வங்கள்**

- **அருள்மிகு ஸ்ரீ கரையடி கருப்பசாமி**

  அய்யனாரின் பரிவாரத் தெய்வங்களில் ஒன்று அருள்மிகு ஸ்ரீ கரையடி கருப்பசாமி. இவர் காவல் தெய்வமாவார். இவர் கம்பீரமான தோற்றத்துடன் வலதுகையில் அரிவாளும் இடது கையில் சுக்குமாந்தடியுடன் நின்ற கோலத்தில் காணப்படுவார்.இவர் இரவில் வெள்ளைக் குதிரையில் ஏறி, நாய் உடன் வர, ஊரை வலம் வந்து காவல்புரிவார்

- **மரவழிபாடு**

  மர வழிபாடு என்பது காலம் காலமாக இருந்துள்ளது. முன் ஒரு காலத்தில் பசுமையான மரங்களில் தெய்வங்கள் குடி உள்ளதாக நம்பி மர வழிபாட்டை கடைப்பிடித்து வந்தார்கள். அதன் இன்னொரு முக்கியமான காரணம் முன்காலத்தில் நாட்டுப்புறங்களில் இருந்த ஆலயங்களும், வழிபாட்டுத் தலங்களும் மரங்களின் அடியில் அமைந்து இருந்ததினால் மரங்கள் தெய்வீகத் தன்மைகளை கொண்டவையாக உள்ளன என்பதாக மக்கள் நம்பினார்கள். அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவிலில் வேம்பு மரத்தை அம்மனாக வழிபடுகின்றனர்.

- **சூலாயுதவழிபாடு** போரில் தங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும் படைக்கருவிகளை வழிபடும் முறை ஆதி காலம் தொட்டே இருந்துவருகிறது. ‘கருவிகள்’ வெறும் வேட்டையாடலுக்கானது மட்டும் அல்ல. தொன்மை வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் சான்றுகளாகவும் இருக்கின்றன. கற்காலம் முதல் இக்காலம் வரை மனிதனை வாழ வைத்துக் கொண்டிருப்பது கருவிகளே. போரில் வெற்றிபெற உதவும் ஆயுதங்களை வைத்து வழிபடும் நடைமுறையும் உண்டு. இதற்கு ‘வாண்மங்கல விழவு’, ‘வாளுடை விழவு’ என்று பெயர். அதன் பரிணாம வளர்ச்சியே அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவிலில் சூலாயுதம் என்ற படைக்கருவியை வழிபடும் முறை பின்பற்றப்படுகிறது.

**அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் திருவிழா**

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை திருவிழா தொடங்குகிறது. வெள்ளிக்கிழமை காலை மேளதாளத்துடன் பால்குடம் மற்றும் தீர்த்தம் வீதி உலா வீதி உலா எடுத்து வந்து அய்யனாருக்கும் தேவியருக்கும் கருப்பசாமிக்கும் அபிஷேகம் நடைபெறும். அன்று இரவு கோயில்வீட்டில் பெட்டியை கொட்டு முழக்கோடு ஊர்வலமாக ஐயனை அழைத்து வீதி உலா வந்து கோவிலுக்கு எடுத்துச் செல்கின்றனர். பெட்டியில் தெய்வ வழிபாட்டிற்குரிய பொருட்கள் பாதுகாக்கப்படும். பின்பு பெட்டியை ஊர்வலமாக எடுத்துச் செல்வதையும் என்னும் பொழுது மனிதன் இறை உணர்வோடு வாழ்ந்த நாளில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததையும் மக்கள் இடம் விட்டு வேறிடம் பெயர்ந்த காலத்தின் எச்சங்களாகவும் இந்நிகழ்ச்சி அமைகிறது எனலாம். ஐயனை அழைத்து வீதி உலா வந்து “பொங்கல் வைத்தல்” நிகழ்ச்சி நடைபெறும். இவ்வழிபாட்டு நாட்களில் சாமியாட்டம் சிறப்பாய் நடத்தப்படுகின்றது. அதன் பின் சிறுவர் - சிறுமியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை மாலையில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் திடலில் அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெறும். இரவில் ஸ்ரீ கரையடி கருப்பசாமிக் உச்சிக்கால பூஜை மிகச் சிறப்பாக நடைபெறும்.

**ஸ்ரீ தலைதாங்கி அய்யனாருக்கான படையல்**

காவல் தெய்வமான அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் சைவ உணவு உண்பவர். சர்க்கரைப் பொங்கல் படைக்கப்படும். ஆனால் இவரது பரிவார தெய்வங்களான ஸ்ரீ கரையடி கருப்பசாமிக்கு ஆடு, கோழி பலியிடுகின்றனர். பலியிடும் போது அய்யனார் சன்னதியை மூடிவைத்து விடுவார்கள் அல்லது திரையிட்டு விடுவார்கள்.

**நேர்த்திக்கடன்கள்**

மனிதன் தன்னுடைய தேவையை இறைவனிடம் வேண்டுகிறான். நினைத்தது நிறைவேறுவதற்கு தெய்வமே காரணம் என நம்புவதால் அதற்குரிய நன்றிக் கடனைச் செலுத்துகிறார். நேர்த்திக்கடனுக்கு நேர்ந்து கொண்டவர்களும் முடி இறக்கிக் கொள்கின்றனர். உயிருள்ள ஆடு, சேவல் போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

**முடிவுரை**

- அய்யனார் என்ற சொல்லானது அய்(ஐ), அன், ஆர் என்ற மூன்றால் ஆனதாகும்.
- சிலப்பதிகாரம், பக்தி இலக்கியங்கள், கந்தபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் புராணங்களிலும் அய்யனார் வழிபாடு உள்ளன.
- தொடக்க காலத்தில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் தெய்வத்தை முருகர் என்று நினைத்து வழிபட்டனர் .
- உடன்குடி ஊரில் உள்ள தலைதாங்கி அய்யனார் கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து கட்டப்பட்ட கோவில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் ஆகும்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் ஊரைக் காக்கும் தெய்வம் என்பதால் இனாம்கரிசல்குளம் ஊரின் எல்லையில் கண்மாய்க் கரை அருகே ஒரு சிறிய சதுர

கருவறையில் அய்யனார் தனது இரு துணைவியுடன் நிற்ற கோலத்தில் வீற்றிருக்கிறார்.

- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கிழக்கு திசை நோக்கி அமர்ந்திருப்பார். தலையில் ஜடாமகுடமும் வலது காதில் குழையும் இடது காதில் குண்டலமும் சந்தனமும் வலது கையில் தண்டம் அல்லது செண்டும் வைத்திருப்பார்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் பொற்கொடிஅம்மன், பூரணத்தம்மனுடன் வீற்றிருக்கிறார்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனாரின் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றான அருள்மிகு ஸ்ரீ கரையடி கருப்பசாமி காவல் தெய்வமாவார்.
- ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை திருவிழா தொடங்குகிறது. வெள்ளிக்கிழமை காலை அய்யனாருக்கும் தேவியருக்கும் கருப்பசாமிக்கும் அபிஷேகம் நடைபெறும். அன்று இரவு கோயில்வீட்டில் பெட்டியை கொட்டு முழக்கோடு ஊர்வலமாக ஐயனை அழைத்து வீதி உலா வந்து கோவிலுக்கு எடுத்துச் செல்கின்றனர். இவ்வழிபாட்டு நாட்களில் சாமியாட்டம் சிறப்பாய் நடத்தப்படுகின்றது. அதன் பின் சிறுவர் - சிறுமியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை மாலையில் அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் கோவில் திடலில் அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெறும். இரவில் ஸ்ரீ கரையடி கருப்பசாமிக் உச்சிக்கால பூஜை மிகச் சிறப்பாக நடைபெறும்.
- அருள்மிகு ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் சைவ உணவு உண்பவர். இவரது பரிவார தெய்வங்களான ஸ்ரீ கரையடி கருப்பசாமிக்கு ஆடு, சேவல் பலியிடுகின்றனர். பலியிடும் போது அய்யனார் சன்னதியை மூடிவைத்து விடுவார்கள்.
- நேர்த்திக்கடனுக்கு நேர்ந்து கொண்டவர்களும் முடி இறக்கிக் கொள்கின்றனர். உயிருள்ள ஆடு, சேவல் போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

ஸ்ரீ தலைதாங்கி அய்யனார் திருக்கோவில் வழிபாடு பற்றிய செய்திகளை இவ் ஆய்வுக் கட்டுரை வழி அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1.வில்லியம்ஸ், ஜோனா காட்ஃபிரைட்; ஹன்னிங்டன், சூசன் எல். (1981). கலாதர்சனம்: இந்திய கலையில் அமெரிக்க ஆய்வுகள் தெற்காசிய கலாச்சாரத்தில் ஆய்வுகள் தொகுதி 9 . பிரில். ப. 67. ஐஎஸ்பிஎன் 9789004064980.

2.↑ Cutantiran, Ā Vēluccāmi (2001). நன்னிலம் தாலுகாவில் உள்ள கோவில்கள்: தமிழ்ப் பல்கலைக் கலக விழாவின் 225வது தொகுதி ஐகானோகிராஃபிக் தலைசிறந்த படைப்புகளாகும் . தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம். ப. 205.

துணைநூற்பட்டியல்

1. முனைவர் ஞானம் - நாட்டுப்புறஇயல்: தோற்றமும் வளர்ச்சியும்

முதற்பதிப்பு - 2017

கௌரா பதிப்பகக் குழுமம்,

9, செயிண்ட் ஜான் சர்ச் காம்ப்ளக்ஸ்,

ராக்கின்ஸ் சாலை,

திருச்சிராப்பள்ளி.

2. .N.A.சரவண குமாரன் - தமிழர் காவல் தெய்வங்கள்

முதற்பதிப்பு - 2009

21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2வது தெரு,

இராஜாஜி நகர் விரிவு,

வில்லிவாக்கம், சென்னை-49,

தொலைபேசி-26502086.